ஏழைப் பெண்களுக்கு

18 வயது முதல் இலவச திருமண உதவித்தொகை வழங்கப்படும்

கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஜூலை. 26-

"18 வயது முதல் ஏழை பெண்களுக்கு இலவச திருமண உதவி திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்படும்" என்று சட்ட சபையில் முதல் - அமைச்சர் கருணாநிதி அறிவித்தார்.

தமிழக பட்ஜெட் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஒவ்வொரு கட்சியின் தலைவர்களும் நேற்று சட்டசபையில் பேசினார்கள். அதன் விவரம் வருமாறு:-

திசை திருப்புகிறார்

ஜி. பழனிச்சாமி (வ.கம்):- அரசியல்வாதியாக இருந்தாலும், அதிகாரியாக இருந்தாலும் யார் லஞ்ச ஊழல் செய்தாலும் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை நடந்து முடிந்த தேர்தல் நிரூபித்து உள்ளது. முன்னாள் முதல் - அமைச்சர் இன்று பதட்டத்தோடு ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளார். தமிழக மக்களை திசை திருப்பும் காரண காரியத்தில் அவர் ஈடுபட்டு உள்ளார்.

காவிரியில் ஜூன் 12-ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும். தண்ணீர் திறந்து விடப்படாததால் 45 லட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

கொசு வலை

முன்னாள் அமைச்சர்கள் முறைகேடாக வாங்கியுள்ள ஊழல் சொத்துக்களை பாகுபாடு இல்லாமல் கைப்பற்ற வேண்டும். ஏழை விவசாய தொழிலாளர்களுக்கும் கூலி தொழிலாளர்களுக்கும் கொசுவலை வழங்கும் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.

மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு தனி டைரக்டர் நியமிப்பது சரிதானா என்பதை அரசு பார்க்க வேண்டும். விவசாய கூட்டுறவு கடன்களை அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். ஸ்டேண்டர்டு கார் தொழிற் சாலையை உடனடியாக திறக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்பு தேர்தலுக்கு புகைப்படம் எடுக்கும் போது அந்த பகுதிகளில் தண்டோரா போட்டு மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். போக்குவரத்து துறையில் 300 கோடி நஷ்டம் என்று பட்ஜெட்டில் கூறப்பட்டு உள்ளது. அரசு பஸ் என்றால் மக்கள் பயணம் செய்வதற்கு அச்சப்படுகிறார்கள். அந்த அளவுக்கு கடந்த கால ஆட்சியினர் எதை எல்லாம் சீர்குலைக்க வேண்டுமோ அதையெல்லாம் சீர்குலைத்து உள்ளனர்.

திருமண உதவி திட்டம்

ஏழை பெண்களுக்கு இலவச திருமண உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தற்போது 21 வயதான ஏழை பெண்களுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த வயது வரம்பை 18 ஆக குறைக்க வேண்டும். ஏனென்றால் கிராமப்புறங்களில் ஏழை பெண்கள் 18 வயதிலேயே திருமணம் செய்து கொள்கிறார்கள்.

முதல்-அமைச்சர் கருணாநிதி:- ஏழை பெண்களுக்கு திருமண உதவி வழங்கும் திட்டத்தில் முன்பு தி.மு.க. ஆட்சியில் 18 வயது ஆன ஏழை பெண்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. இடையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 21 வயதாக அதிகப்படுத்தி அந்த திட்டத்தை சீர்குலைத்து விட்டனர். இனிமேல் 18 வயது பெண்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்கப்படும்.

தண்டனை

சோ. பாலகிருஷ்ணன்:- ஏழைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட நல்ல நிதி அறிக்கை இது. இங்கு கருணை இல்லாதவர்கள் போய் விட்டார்கள். கருணை உள்ளம் கொண்டவர்கள் ஆட்சிக்கு வந்து உள்ளார்கள்.

இந்த அரசு வேகமாக செயல்படுமா? என்று கவர்னர் உரையின்போது கூறினேன். அது தவறு என்பது இப்போது தெரிந்து விட்டது. இந்த அரசு 2 மாதத்துக்குள்ளேயே வேகமாக செயல்பட்டு உள்ளது. முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். இன்னும் குற்றம் செய்தவர்களுக்கு உரிய தண்டனை வந்து கொண்டு இருக்கிறது.

கொள்ளை அடித்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படுவதை பாராட்டுகிறேன்.

எலெக்டிரானிக் பொருட்களுக்கு 12 சதவீதம் வரி போட்டு இருப்பதை குறைக்க வேண்டும். தங்கத்துக்கு கூட வரி குறைக்க வேண்டும்.

சைக்கிள் சின்னம்

தமிழுக்கு நல்ல அமைச்சரை கொடுத்து இருக்கிறார்கள். இப்போது ஒலிகலப்பு வராமல் இருக்க மாற்றம் செய்கிறார்கள். சைக்கிளை ஈருருளி என்று கூறி விடாதீர்கள். ஏனென்றால் சைக்கிள் சின்னம் எங்கள் கட்சியின் சின்னம். ஏற்கனவே சைக்கிள் என்பது துவி சக்கர வண்டி என்று கூறப்பட்டது. பின்பு "ஈருருளி" என்று நல்ல தமிழில் வர வேண்டும் என்று கூறப்பட்டது. பின்பு மிதி வண்டி என்று வழக்கில் வழங்கப்பட்டு உள்ளது.

முதல் - அமைச்சர் கருணாநிதி:- உதயசூரியன் என்பது கூட வட மொழி சொல்தான். இருப்பினும் அதையே பயன்படுத்தி பழகி விட்டோம். எனவே சைக்கிள் என்பதையே நீங்கள் பயன்படுத்தலாம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.